2015 செப்டம்பர் 22]

320—

தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகம்

***45544 திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் நகரிலுள்ள தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாவட்டத் தலைமையிடங்களில் மட்டுமே தொழிலாளர் நலத் துறை அலுவலகங்களுக்கான சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆம்பூர் நகரிலுள்ள தொழிலாளர் நலத் துறை ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் நகரத்தில் தற்போது தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகம், முத்திரைத் தீர்வைத் துறை ஆய்வாளர் அலுவலகம் ஆகியவை இயங்கி வருகின்றன. அந்த அலுவலகங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வணிகர்கள் பதிவு செய்திருக்கின்றார்கள். அவர்கள் வருடத்தில் ஏறத்தாழ ரூபாய் 7½ இலட்சத்திலிருந்து ரூபாய் 10 இலட்சம் வரை முத்திரைக் கட்டணங்களைச் செலுத்துகின்றார்கள். ஆம்பூர் தொகுதி, வணிகர்கள் அதிகம் உள்ள பகுதியாகும். ஆம்பூர் நகரத்தில் இருக்கக்கூடிய அந்த அலுவலகம் மாவட்டத் தலைநகரத்தில் இருக்கக்கூடிய ஒருங்கிணைந்த வளாகத்திற்கு மாற்றப்பட*

இருக்கின்றது என்ற ஒரு கருத்து நிலவுகின்றது. இந்தக் கேள்வி கேட்கப்படுவதற்குக் காரணமே அதுதான். ஆகவே, தற்போது இயங்கிக் கொண்டிருக்கின்ற அந்த அலுவலகம் தொடர்ந்து ஆம்பூர் நகரத்திலேயே இயங்க வேண்டும்; வேலூர் மாநகரத்திற்கு மாற்றப்படக்கூடாது எனக் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி, ஆம்பூர் நகரில் தொழிலாளர் நலத் துறை ஆய்வாளர் அலுவலகம் கட்டப்பட வேண்டும் என்பதுதான். ஆனால், தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகம் மாவட்டத் தலைநகரங்களில் மட்டும்தான் இப்போது செயல்படுகின்றது. அவருடைய பகுதியான ஆம்பூரில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகமும் மற்றும் முத்திரைத் தீர்வைத் துறை ஆய்வாளர் அலுவலகமும் மட்டும்தான் உள்ளன. மாவட்டத் தலைநகரங்களுக்கு தொழிலாளர்கள் மிக அதிகளவில் வரக்கூடிய ஒரு சூழல் இருக்கின்ற காரணத்தினால், உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் 110 விதியின்கீழ் அறிவித்து, அதில் 19 மாவட்டங்கள் முதல் கட்டமாக எடுக்கப்பட்டு, அதற்கு 40 கோடியே 50 இலட்சம் ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து, தற்போது பொதுப் பணித் துறையின்மூலமாக தொழிலாளர் நலத் துறை ஆய்வாளர் அலுவலகங்களுக்கான கட்டடங்கள் எல்லாம் கட்டுவதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஆம்பூர் தொகுதியினை உள்ளடக்கிய வேலூர் மாவட்டத்தின் தலைநகரான வேலூரில் 12 அலுவலகங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தொழிலாளர் நலத் துறை அலுவலகக் கட்டடங்கள், 50 சென்ட் நிலத்தில், ரூபாய் 4.25 கோடி மதிப்பீட்டில், பொதுப் பணித் துறையினால் கட்டப்பட இருக்கிறது.

எனவே, ஆம்பூரில் தற்போது செயல்பட்டு வரும் தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகம் மாற்றப்படும் என்கிற பயம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தேவையில்லை. அடுத்தகட்டமாக, தொழிலாளர் நலனுக்காக பல்வேறு பணிகளைத் தொடர்ந்து செய்ய இருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த நல்லரசு, முதலில் மாவட்டத் தலைநகரங்களிலே அந்த ஒருங்கிணைந்த கட்டடங்கள் கட்டப்பட்டதற்குப் பின்னால், அந்தந்தப் பகுதியிலே தேவைகளுக்கேற்ப, நிதிநிலைகளுக்கேற்ப அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி சிந்திக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 321, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

321—

அங்கன்வாடி கட்டடம்

***52873—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, வளையாம்பட்டு ஊராட்சி, வளையாம்பட்டு ஆதி திராவிடர் காலனியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதி, வளையாம்பட்டு ஆதி திராவிடர் காலனியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு, புல எண் 106/2G என்கிற இடத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.